செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 395 நாள்: 7/7/17

**வேலூர் மாவட்ட விவசாய பெருமக்கள் நுண்ணீர் பாசன திட்டத்தில் பங்கு பெற ஓர் அரிய வாய்ப்பு**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க குறைந்தநீரில் அதிகபரப்பு சாகுபடி செய்திட உதவும் உன்னத திட்டமான நுண்ணீர் பாசன திட்டமானது தமிழக அரசால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இயற்கை நீர்வளம் குறைந்து கொண்டே வரும் இந்த சூழலில் இத்திட்டத்தின் மூலம் 40 முதல் 60 சதவீதம் நீர் சேமிக்கப்படுகிறது.

பாரத நாட்டில் எந்த மாநிலங்களிலும் இல்லாத வகையில் தமிழகத்தில் மட்டும் சிறு குறு விவசாயிகளுக்கு (100 சதவீத மானியத்தில்) நுண்ணீர் பாசன அமைப்புகள் எக்டர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.1 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

சிறு/குறு விவசாயிகளுக்கு வேளாண் மற்றும் காய்கறி பயிர்களுக்கு 2.5 ஏக்கர் மற்றும் இதர பயிர்களுக்கு 5 ஏக்கர் வரை இலவசமாக நுண்ணீர் பாசன அமைப்புகளை தங்கள் நிலங்களில் அமைத்துக் கொள்ளலாம். இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டமானது, வேலூர் மாவட்டத்தில் 2016-17ம் ஆண்டில் 1594 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு, இதுவரை ரூ.774 லட்சம் மானியம் பொது பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளது. **ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்திற்காக தற்பொழுது ரூ.222 லட்சம் நிதி செலவிட அரசு வழிவகை செய்துள்ளது.**

**2017-18ம் ஆண்டிற்கு 4780 எக்டர் பரப்பளவில் ரூ.2939.7 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலும் ரூ.588.0 லட்சம் நிதி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

இத்திட்டத்தில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் குடும்ப அட்டை நகல், கிராம அடங்கல், கணிணி சிட்டா, நிலவரைபடம், சிறு/குறு விவசாயிகளாக இருப்பின் அதற்கான வட்டாட்சியரிடம் இருந்து பெறப்பட்ட சான்று ஆகிய ஆவணங்களுடன் அருகில் இருக்கும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்/வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அலுவலக எண்.0416-2267315, மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலக எண்.0416-2263530 என்ற தொலைப்பேசி எண்களில் தொடர்பு கொண்டு திட்டம் குறித்த விவரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அளிக்கும் இந்த பொன்னான வாய்பபினை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,

7/7/2017

செ.ம.தொ.அ.
வேலூர்– 9.